ISSN : 2456-821X.

புதிய அவையம்

Vol. 09, Issue – 02, December - 2025

கட்டுரை பெறப்பட்டது : November - 2025 கட்டுரை ஏற்கப்பட்டது : December – 2025

# கவிக்கோவின் ஆய்வுகள்

முனைவர் கி. பார்த்திபராஜா

தமிழ்த்துறைத் தலைவர்

தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)

திருப்பத்தூர்.

குறிச் சொற்கள்:

கவிக்கோ, அப்துல் ரகுமான், புதுக்கவிதை, குறியீடு, தொன்மம், கம்பன், அரசியல், கோட்பாடு, பொருள்கோள்.

ஆய்வுச் சுருக்கம்

இலக்கியங்களின் ராணி என்று கவிதையைக் கொண்டாடுவதுண்டு. தமிழின் நீண்ட நெடிய கவிதைப் பரப்பில், தன் கவியரங்கக் கவிதைகளுக்காகவும் காத்திரமான மௌனவாசிப்புக் கவிதைகளுக்காகவும் கொண்டாடப்பட்டவர் அப்துல்ரகுமான். தன் வாசகர்களால் ‘கவிக்கோ’ என்று அழைக்கப்பட்டவர் அவர். தமிழ்ப் பேராசிரியராகத் தன்

வாழ்க்கையைத் தொடங்கிய கவிக்கோ, தமிழ் இலக்கிய உலகுக்கு வழங்கிய கொடைகள் ஏராளம். அவர் எழுதிய கவிதைகளின் மொழிச்செறிவு, கருத்து ஆழம், செய்முறை நேர்த்தி, அடர்த்தி, இறுக்கம் ஆகியவற்றினால், அவரைக்'கவிஞர்களின் கவிஞர்' என்று குறிப்பர்.

தமிழ்கூறு நல்லுலகில் கவிஞராக அறியப்பட்ட கவிக்கோ, அடிப்படையில் ஒரு பேராசிரியர் என்பதால், தன் பணிகளின் நிமித்தம் ஆய்வுப்பணிகளிலும் ஈடுபட்டார். அவர் படைத்தளித்த பெருமளவு கவிதைகளோடு ஒப்பிடுகையில், அவர் மேற்கொண்ட ஆய்வுகள் என்பவை மிகவும் சொற்பமானதே ஆகும். ஆனாலும், உள்ளும் புறமுமான ஒரு கவிஞன், ஆய்வுச் செயற்பாட்டில் ஈடுபடும்போது அதன் வெளிப்பாடு எவ்வாறு அமையும் என்பதற்கு எடுத்துக்காட்டாகக் கவிக்கோவைக் குறிப்பிட இயலும். அந்த அடிப்படையில் கவிக்கோவின் ஆய்வுகள் குறித்துப் பருந்துப் பார்வையில் நோக்கி, மதிப்பீட்டை முன்வைக்கிறது இக்கட்டுரை.

**முன்னுரை**

கவிக்கோ, தன்னுடைய முனைவர் பட்ட ஆராய்ச்சிக்காகத் தேர்ந்தெடுத்துக்கொண்ட தலைப்பு, 'புதுக்கவிதையில் குறியீடு' என்பதாகும். அவ்வாய்வைச் செம்மையாக மேற்கொண்டு அவர் பட்டமும் பெற்றார். பிறகு அவ்வாய்வேட்டை நூலாகவும் வெளியிட்டுள்ளார். சென்னை கம்பன் கழகத்தாரால் அழைக்கப்பட்டுக் கவிக்கோ நிகழ்த்திய அறக்கட்டளைச் சொற்பொழிவின் நூல் வடிவம், 'கம்பனின் அரசியல் கோட்பாடு' என்பதாகும். இவ்விரண்டு ஆய்வு நூல்களைத் தவிர, 'குணங்குடி மஸ்தான் சாகிபு'வின் பாடல்களைத் தொகுத்து, விரிவான ஆய்வு முன்னுரையோடு 'குணங்குடியார் பாடற்கோவை' என்ற தலைப்பில் நூலாகவும் வெளியிட்டுள்ளார். இம்மூன்று நூல்களையும் தவிர, கவிக்கோ எழுதிய கட்டுரைகளை, ஆய்வுக்கட்டுரைகள் என்று வகைப்படுத்துவதைவிட, இலக்கியம், சமூகம் குறித்த பொதுக் கட்டுரைகள் என்றே வகைப்படுத்தலாம். எனவே கவிக்கோவின் ஆய்வுகள் என்று அடையாளப்படுத்தப்படுவன் மேற்குறித்த மூன்று நூல்கள் மட்டுமே ஆகும்.

**புதுக்கவிதையில் குறியீடு**

ஒரு சொல்லைப் பொருள் கொள்வதில் இருக்கும் நவீனச் சிந்தனையைக் கவிக்கோ வலியுறுத்துகிறார். அவர் இருவைகப் பொருளுறவு குறித்துக் கவனப்படுத்துகிறார். ”ஏதேனும் ஒருவகை உறவால் குறியீடு தோன்றுகிறது. பொதுவாகப் பொருள்களிடையே இருவகையில் உறவு தோன்றுகிறது. ஒரு பொருளோடு மற்றொரு பொருள் ஒத்திருந்தால் இரண்டிற்கும் இடையே உறவு தோன்றும். இதனை ஒப்புரவு (Association of Similarity) எனலாம். இங்கே ஒப்புமை என்பது உருவ ஒன்றுமை மட்டுமன்று. அருவமான பண்பு ஒப்புமையும் ஒப்புமையே. பெண்ணை, ‘விளக்கு’ என்று குறிப்பிடுவதற்கு உருவ ஒற்றுமை காரணமில்லை; விளக்கின் பண்புகளே காரணமாகின்றன” (பக்.11) என்கிறார் அவர். ஒட்டுறவு (Association of Contiquity) – மூன்று வகையில் ஏற்படலாம் என்று கவிக்கோ அடையாளப்படுத்துகிறார். சில பொருட்கள் இயற்கையாகச் சேர்ந்திருப்பன. (புகை இயற்கை ஒட்டுறவால் நெருப்பிற்குக் குறியீடானது) - சில செயற்கையாகச் சேர்த்து வைக்கப்படுவன. (வணிக நிறுவனங்களின் சின்னங்கள், கணிதக் குறியீடுகள் செயற்கை ஒட்டுறவால் குறியீடானவை) - சில தற்செயலாக இணைவன. (இந்திய சுதந்திரத்தைக் குறிக்கும் ‘ஆகஸ்டுப் பதினைந்து’ தற்செயல் இணைவால் ஏற்பட்ட குறியீடு. இவ்வாறு குறியீடுகளின் தன்மைகளைப் பொறுத்து அவற்றை மூன்றாக வகைப்படுத்திக் காட்டுகிறார் கவிக்கோ. சில ஒட்டுறவுகள் வெளிப்படையாகப் புலப்படும் தன்மையன; சில அவ்வாறு வெளிப்படையாகப் புலப்படா. ஆனாலும் ஒரு குறிப்பிட்ட சமூகம், தன்னுடைய இயங்குவெளியில் அதன் உட்பொருளை ஏதேனும் ஓரிடத்தில் பதிந்து வைத்திருக்கும் என்கிறார் கவிக்கோ. எடுத்துக்காட்டாக, ‘முடியிறக்குதல்’ என்ற சடங்குக்கும் பொருளுக்கும் இருக்கும் ஒட்டுறவு வெளிப்படையாகப் புலப்படாதது. அதாவது, உலகப் பற்றைத் துறப்பதையே ‘முடியிறக்குதல்’ என்பது குறிக்கிறது. முடி என்பது பாலுணர்வின் குறியீடு. கவிக்கோ எடுத்துக்காட்டுவதைப் போன்ற வெளிப்படாக் குறியீடுகள் பலவற்றைக் கொண்டது தமிழ்ச் சமூகம். எடுத்துக்காட்டாக, இறப்புச் சடங்கில் செய்யப்படும் சடங்குகளைக் குறிப்பிடலாம். இறந்த ஆணுக்குச் செய்யப்படும் சவரம் செய்தல், குளிப்பாட்டுதல், புத்தாடை அணிவித்தல், அலங்கரிக்கப்பட்ட தேரில் கொண்டு செல்லுதல் என்பனவாகிய இவை யாவும், அம்மனிதன் இவ்வுலகிலிருந்து புறப்பட்டு புதிய உலகத்துக்குப் பயணம் செல்லுவதற்கான ஆயத்தத்தைக் குறிக்கிறது.

**தமிழ் இலக்கிய மரபில் குறியீடு**

தொல்காப்பியர் காட்டும் அடிவரையற்ற ஆறு செய்யுள் வகைகளுள் பிசி, முதுமொழி, மந்திரம், குறிப்பு என்ற நான்கும் குறிப்பாக மற்றொன்றை உணர்த்தும் இயல்புடையன. இவற்றை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கிச் செல்கிறார் கவிக்கோ.சங்க இலக்கியக் காலத்தை இயற்கைக் குறியீட்டுக்காலம் எனலாம். இயற்கைப் பொருட்கள் வெற்று வருணனையாக இடம்பெறாமல், அகத்திணை மாந்தரின் உள்ளத்து உணர்வுகளைக் குறிப்பாக உணர்த்தும் குறியீடுகளாக அகப்பாடல்களில் இடம்பெற்றன.

இயற்கைக் குறியீடு

தொன்மம் (Myth) என்பதும் குறியீடாகக் கவிதைகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

"அன்றுமுதல் இன்றுவரை

இராம இராவண யுத்தம்

சீதை நிமித்தம்" – நகுலன் கவிதையை எடுத்துக்காட்டித் தொன்மம் புதுக்கவிதையில் குறியீடாகப் பயன்படுத்தப்படுவதை விளக்குகிறார் கவிக்கோ.

மேற்குறித்த கவிதையில், சீதை என்ற குறியீடு பொதுவாகப் பெண் என்ற முறையில் பொருள் தருவதோடு, திருமகளின் அடையாளம் என்ற முறையில் செல்வம் என்ற பொருளும், சனகனால் நிலத்திலிருந்து கண்டெடுக்கப்பட்டவள் என்பதால் நிலம் என்ற பொருளும் தந்து போர்களுக்குரிய காரணங்கள் அனைத்தையும் குறிக்கும் ஆற்றலுடையதாகிறது.

செக் நாட்டின்மீது சோவியத் ரஷ்யா படையெடுத்த நிகழ்ச்சியைக் கண்டிக்கும் சி.சு.செல்லப்பா,

"இரணியன் உதிரத்து இருந்து

இரணியம் பிறப்பதோ?

பாரின்கண் மீண்டும்

கலியுகம் தோன்றுவதோ?” – என்று கேட்கிறார் என்று எடுத்துக்காட்டும் கவிக்கோ, மேலும் விளக்குகிறார். ரஷ்யப்புரட்சியை வாழ்த்திப் பாடியபோது, சார் அரசனை இரணியன் என்று பாரதியார் குறிப்பிடும் கருத்தைப் பின்பற்றியே செல்லப்பாவின் குறியீடு அமைந்துள்ளதெனினும் ‘இரணியம்’ என்ற ஒரு புது சொல்லாக்கம் அவரால் செய்யப்பட்டுள்ளது.

அப்துல்ரகுமான் கவிதைகளில் குறியீடு இடம் பெற்றுள்ள தன்மையை அவர் விளக்கியுரைக்கிறார். தன்னையே கொஞ்சம் கொஞ்சமாக உருமாற்றிக் கவிதைகளாக ஆக்கிக் கொண்டிருப்பதாகக் கூறவிரும்பும் அப்துல் ரகுமான்,

“என் ஆறாவது விரல் வழியே / சிலுவையிலிருந்து

வடிகிறது ரத்தம்

ஆம் / என் ‘மாம்சம்’ / வார்த்தை ஆகிறது” என்கிறார்.

ஆதியிலே தேவனிடத்திலிருந்த ‘வார்த்தை’ மாம்சமாகி இயேசு வடிவில் வந்ததாகவும், பின்னர் இயேசு சிலுவையில் அறையப்பட்டதாகவும் கூறும் விவிலியத்தில் கருத்துகளை இணைத்து, இந்நிகழ்ச்சி வரிசையை மாற்றி அமைத்ததன் மூலம் தம் கருத்தை அப்துல் ரகுமான் வெளிப்படுத்திக் கொள்கிறார்.

**மூவகை மாற்றங்கள்**

குறியீடுகளில் மூவகை மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதைக் கவிக்கோ அடையாளப்படுத்துகிறார். அவை, உருத்திரிதல், புதுப்பொருள் ஏற்றல், மதிப்பிழத்தல் என்பனவாகும்.

**உருத்திரிதல்**

நா.காமராசனின் பின்வரும் கவிதை, பாற்கடல், தேவர்கள், அசுரர்கள், அமிழ்தம் ஆகிய தொன்மங்களை உருத்திரித்து உருவாக்கப்பட்ட கவிதை ஆகும்.

”பாற்கடல் அமுதத்தைத் தேவர்கள் சுவைத்துவிட்டதால்தான்

எங்கள் இதழ் அமுதத்தை அரக்கர்களுக்கு வழங்குகிறோம்" – விலைமகளின் கூற்றாக நா.காமராசன் எழுதுகிறார்.

தொன்மத் திரிபுக் குறியீடுகளைப் பால்வீதி மிகுதியாகப் பெற்றுள்ளது. நம் நாட்டுத் தேர்தல்களில் வேட்பாளர்களும் வாக்காளர்களும் எவ்வாறு இருக்கிறார்கள் என்பதை உணர்த்தும்,

"புறத்திணைச் சுயம்வர மண்டபத்தில்

போலி நளன்களின் கூட்டம்

கையில் மாலையுடன்

குருட்டுத் தமயந்தி" என்ற கவிதையையும்,

பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றவர்களே வெற்றி அடையமுடியும் என்ற தேர்தல் விதியால் உண்மையான தகுதி பெற்றவர்கள் வெற்றிபெற முடியாமல் போகிற இன்றைய நாட்டு நிலையைக் கூறும்,

"எண்ணிக்கையே தர்மமாகிய / குருஷேத்திரத்தில்

வெற்றிகளெல்லாம்

கௌரவர்களுக்கே / போய்ச் சேருகின்றன" என்ற கவிதையையும் காட்டலாம் என்கிறார் கவிக்கோ.

**புதுப்பொருள் ஏற்றல்**

ஒரு குறிப்பிட்ட குறியீட்டை, அதன் பொருத்தப்பாடுடைய இடத்திலிருந்து நகர்த்திப் புதுப்பொருளுக்குத் தக அமைப்பது 'புதுப்பொருள் ஏற்றல்' என்னும் வகைமையைச் சார்ந்ததாகிறது.

சிவபெருமான் பிட்டுக்கு மண்சுமந்த கதை சக்திக்கனலின் பார்வையில் தொழிலாளர் வர்க்கத்தின் முதல் வேலைநிறுத்தமாகப் படுகிறது.

"மதுரைச் சொக்கன் என்ற ஒரு தொழிலாளி

அணைக்கட்டுக்கு மண் சுமக்க மறுத்து

வேலை நிறுத்தம் செய்ததற்காக

பாண்டிய அடித்த சவுக்கடி

சுரீர் எனப்பட்டு ஜீவராசிகளின் உடலெல்லம்

சுவடு பதித்தது! சொரணை கொடுத்தது"

மேற்காணும் கவிதை, பக்தி இயக்க / இலக்கிய உள்ளடக்கத்தைக் கொண்டது. ஆனால் அந்நிகழ்வுக்குப் புதுப்பொருள் கற்பிக்கிறார் கவிஞர். இவ்வாறு பழைய குறியீட்டுக்குப் புதுப்பொருள் கற்பித்தல் என்பது அமைகிறது.

**மதிப்பிழத்தல்**

தீவிர மார்க்சியப் பார்வையுடைய இன்குலாபின் கவிதைகளில் இந்த மதிப்பீடு இழப்பு மிகுதியாகத் தெரிகிறது. அவர் கவிதைகளில் குறியீடுகள் மதிப்பிழப்பதன்றித் தம் குறியீட்டுத் தன்மையையும் இழந்து விடுகின்றன என்று கருத்துரைக்கிறார் கவிக்கோ.

"வெள்ளிவிழா மண்டபத்தில்

விடுதலைத் தேவதையைப்

பாண்டவர்களும் துரியோதனாதிகளும்

பங்குபோடும் வேளையில்..." என்ற கவிதையில் பாண்டவர்களும் தீயவர்களாகச் சித்தரிக்கப்படுகிறார்கள் என்பதை எடுத்துக்காட்டுகிறார்.

**புதுக் குறியீடு**

மரபில் உள்ள ஒன்றைக் குறித்து விளக்குவது மட்டும் குறியீடாக அமைவதில்லை; மாறாக, புதிய குறியீடுகளையும் புதுக்கவிஞர்கள் உருவாக்குகின்றனர் என்பதை எடுத்துக்காட்டுகிறார் கவிக்கோ.

"அரச மரங்களை வெட்டி எறிந்தனர்

ஆல மரங்களை நட்டு வளர்த்தனர்"

என்ற சண்முக சுப்பையாவின் கவிதையை எடுத்துக்காட்டுகிறார் அவர். இக்கவிதையில், ‘அரசியல்’ என்பது கவிதைத் தலைப்பு. அரச என்ற சொல்லின் சிலேடைப் பொருளாலும் முடியாட்சியைக் குறிக்க, ஆல மரங்கள் இடம்பெறும் சூழலால் குடியாட்சியைக் குறிக்கின்றன என்கிறார்.

## மறிதரு குறியீடு (Recurrent Symbol)

ஒரு படிமமோ, உருவகமோ, உவமையோ ஒரு குறிப்பிட்ட பொருளில் மீண்டும் மீண்டும் ஆளப்பட்டால், அவை குறியீட்டு நிலையை அடைந்துவிடும். 'கோடிச் சூரியர்களைப் பிழிந்து நட்சத்திரங்கள் செய்தேன்' என்ற இடத்தில் செறிவு என்ற பொருளில் பயன்படுத்தப்படுகிறது.

சார்புநிலை மறிதரு குறியீடுகளில் ‘சிவப்பு’ முதலிடம் வகிக்கிறது. பொதுவுடைமைக் கட்சியின் செங்கொடியிலிருந்து பிறந்த இக்குறியீடு, மார்க்சியத்தையும், பொதுவுடமை நாடுகளையும், பொதுவுடைமைச் சமுதாயத்தையும், புரட்சியையும் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

'சிறுமைக்கும் மரணநாள் குறித்துவிடு / அதனையும் சிவப்பு மையால் எழுதிவிடு' – பா.செயப்பிரகாசம். வைகறை – யின் நிறம் சிவப்பாக இருப்பதால் அதையும் சார்புநிலையினர் அடிக்கடி பயன்படுத்திக் கொள்கின்றனர். 'கிழக்கு வானமே! கொஞ்சம் சிவப்பாய் மாறேன்!' என்று கிழக்கு நாடுகளையும் பொதுவுமைமை ஏற்கச் சொல்லிக் கெஞ்சுகிறார் தமிழ்நாடன்.

## குறியீட்டுப் பயன்பாடு

மொழியை ஊடகமாகப் பயன்படுத்தியே கவிஞன் தன் கருத்தை வெளியிட வேண்டியவனாக இருக்கிறான். ஆனால் மொழியோ நுண்மையான உணர்வுகளை வெளியிடும் வல்லமை அற்றது. “மொழி ஒரு பயனற்ற கருவி; அது பேசுவதற்கு விரும்புவதில்லை; நீ என்ன பேசவேண்டும் என்று விரும்புகிறாயோ, அதைப் பேச அதனால் இயலாது; பேசுவதை நிறுத்தவும் தெரியாது” என்று பெக்கட் மொழியின் குறைபாடுகளை விளக்குகிறார் கவிக்கோ.

கருத்தையோ, உணர்வையோ குறீயீட்டாலன்றி வேறு வகையால் சிறப்பாக உணர்த்த முடியாது என்பதை இலக்கியத் திறனாய்வாளர்கள் அழுத்தமாகக் கூறியுள்ளனர். கவிதையில் குறியீடு பலவிதமான அற்புதங்களைச் செய்கிறது. எளிதில் விளங்காத, சுவையற்ற, நீளமான, உணர்வெழுப்பாத கருத்தைக் குறியீடுகளைப் பயன்படுத்துவதன்மூலம், சுருக்கமுடையதாக, விளங்கக்கூடியதாக, சுவையுடையதாக, உணர்வெழுப்புவதாக ஆக்கிவிடலாம்" – ப்ரைட்மான். "தான் வெளிப்படுத்தும் கருத்தின் பல்வேறு பண்புக்கூறுகளை ஒரே நேரத்தில் உணர்த்தும் வல்லமையே குறியீட்டின் பெருமையாகும்" – ஷனீடர்.

அந்த வல்லமையை உணர்ந்தே கவிஞர்கள் அதை விருப்பத்தோடு கையாள்கின்றனர் என்று குறிப்பிடுகிறார் கவிக்கோ.

**சுருங்கச் சொல்லல் :**

சுதந்திரம் என்ற தலைப்பில் எழுதப்பட்ட, "இரவிலே வாங்கினோம் / இன்னும் விடியவே இல்லை" – என்ற எ.அரங்கநாதனின் கவிதையைச் சுருக்க அழகை உண்டாக்கும் குறியீட்டின் ஆற்றலுக்கு நல்ல சான்றாகக் காட்டலாம் என்கிறார் கவிக்கோ.

இந்த இரண்டே வரிகளில் பல தொகுதிகளில் சொல்லவேண்டிய இந்திய வரலாறு சொல்லப்பட்டு விட்டது; விடுதலை கிடைத்த நேரமும் கூறப்பட்டுவிட்டது; விடுதலை கிடைப்பதற்கு முன்னும், கிடைத்த உடனும் மக்கள் கொண்டிருந்த ஏக்கங்கள், ஆசைகள், எதிர்பார்ப்புகள் அத்தனையும் உணர்த்தப்பட்டுவிட்டன; அவை நிறைவேறாமல் போன சோகம், நிராசை, ஆற்றாமை, கோபம் என்ற உணர்வுகளும் வெளிப்படுத்தப்பட்டு விட்டன; இவற்றிற்குக் காரணமான அரசியல்வாதிகளின் மீதும் சுயநலச் சுரண்டல்காரர்களின் மீதும் மக்களின் கவனம் திருப்பப்பட்டு விட்டது. இந்தியா விடுதலை பெற்ற காலமே அது விடுதலைக்குப் பக்குவமடையாத காலம் என்பது உணர்த்தப்பட்டுவிட்டது. விடுதலை எவனோ கொடுக்க, அதை 'ராப்பிச்சையாக' 'வாங்கிய' நிலையும் சுட்டப்பட்டுவிட்டது. விடுதலை என்பதே 'விடிவு' என நினைத்திருந்த எண்ணம் தவறானது என்பது காட்டப்பட்டுவிட்டது. இன்னும் பல கருத்துகளையும், உணர்வுகளையும் சுரக்க வல்லது இக்கவிதை. இதனாலேயே புதுக்கவிதைக்கு ஒரு சிறந்த

உதாரணமாகவே காட்டப்படக்கூடிய அளவுக்கு இந்தக் கவிதை புகழ் அடைந்துவிட்டது. இவ்வளவு சாதனைகளையும் 'இரவு விடிவு' என்ற குறியீடு செய்துவிடுகிறது. இச்சுருக்கத்தை வேறு எதனாலும் அடைய முடியாது. (பக்.179)

இவ்வாறு குறியீடுகளைக் குறித்த மிக ஆழமாக ஆய்வாக அமைகிறது கவிக்கோவின் 'புதுக்கவிதையில் குறியீடு' என்னும் நூல். அவரே ஒரு கவிஞராக இருப்பதாலும், குறியீடுகளை மிகுதியாகப் பயன்படுத்தும் படைப்பாளியாக இருப்பதாலும், அவர்தரும் விளக்கங்கள் வாசிப்பாளனின் மனதிற்கு அருகில் கருத்துக்களைக் கொண்டு நிறுத்துகிறது எனலாம்.

கம்பனின் அரசியல் கோட்பாடு

கவிக்கோ, கம்பனைக் குறித்துப் பல கவிதைகளைப் படைத்தவர்; கம்பன் கழக மேடைகளில் அரங்கேறிய கவிக்கோவின் கவியரங்கக் கவிதைகள் தனித்துவம் மிக்கவை. கம்பனின் அரசியக் கோட்பாட்டைக் குறித்த கவிக்கோவின் இந்நூல் மிகவும் நுட்பமான ஆய்வுநோக்கைக் கொண்டிருக்கிறது.

நூலின் முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார் கவிக்கோ. "கதையில் வரும் கோசலம், கிட்கிந்தை, இலங்கை ஆகிய மூன்று முடியாட்களிலும் கம்பன் குறைகளைக் காண்கிறான். இவ்வகையில் அவன் ஓர் அரசியல் கோட்பாட்டாளனாகச் செயல்படுகிறான். அதே நேரத்தில் ஓர் அரசியல் தத்துவஞானியாகவும் நின்று ஓர் இலட்சிய அரசு எப்படி இருக்க வேண்டும் என்றும் அவன் விளக்குகிறான். இக்கருத்துகள் எல்லாம் கம்பனுக்கு என்று தனித்ததோர் அரசியல் கோட்பாடு இருப்பதை உணர்த்துகின்றன. அக்கோட்பாட்டை இனம் காண்பதே இந்நூலின் நோக்கமாகும்" என்கிறார்.

இந்நூல் 'புல்லரசு', 'நல்லரசு' என்ற இரு பகுதிகளால் அமைந்திருக்கிறது. நாட்டு, நகரப் படலங்களில் கம்பன் வருணிப்பது கோசலத்தையோ, அயோத்தியையோ அல்ல. காப்பியத் தலைவன் பிறந்த இடத்தைப் புகழ்ந்துரைக்கும் காவிய மரபுப்படியே அவ்வருணனைகள் அமைந்துள்ளன. மேலும், அவ்வருணனைகளில் தன் உன்னதக் கற்பனையில் உதித்த இலட்சிய நாட்டையே கம்பன் காட்டுகிறான். கோசலம்

உண்மையில் அத்தகைய இலட்சிய நாடாக இல்லை. அங்கே பல குறைகள் இருந்தன. கம்பன் அதை வெளிப்படுத்துகிறான்.

தசரதன் கொடுங்கோல் செலுத்தியவன் அல்லன். இருப்பினும் வரம்பிலா முடியாட்சியின் (Absolute Monarchy) தலைவனாய் அவன் இருந்ததால் அதன் விளைவாகத் தோன்றக்கூடிய குறைகளும் அவன் நாட்டில் இருந்தன.

இராமன் முடிசூடப்போகிறான் என்றதும் அயோத்தி மக்கள் அளவில்லாத மகிழ்ச்சி அடைகிறார்கள். அப்போது, 'பாவமும் அருந்துயரும் வேர்பறியும்' என்று மகிழ்ந்ததாகக் கம்பன் பாடுகின்றான். கோசலத்தில் வறியவர்கள் இருந்தார்கள் என்று பல இடங்களில் கம்பன் காட்டுகின்றான். கள்ளும் கவறும் காமமும் கோசலத்தில் இருக்கவே செய்தன.

**சாபங்களாகிய வரங்கள்**

முடியாட்சியின் குறைகளைச் சுட்டிக்காட்டும் அரசியல் நூலார், சிக்கல்களை ஆராய்ந்து முடிவெடுக்கும் அவையைவிடத் தனி மனிதன் தவறிழைப்பதற்கு வாய்ப்பு அதிகம் என்பர்.

மேலும், அதிகாரம் எல்லாம் தனி மனிதன் ஒருவன் கையில் குவிந்துவிடும் முடியாட்சியில் மக்கள் கருத்துச் சுதந்திரத்தை இழந்துவிடுவதால், அவர் மனமறியாமல் மன்னன் தன்னிச்சையாக முடிவெடுக்க முனைந்து நாட்டுக்குத் தீங்கு விளைவித்துவிடுவான் என்றும் சுட்டிக்காட்டுவர். தயரதனின் செயல்கள் இக்கருத்துகளை மெய்ப்பிப்பனவாக அமைகின்றன.

மூத்தவனுக்கு அரசுரிமை என்பது தொன்று தொட்டு வரும் முடியாட்சி மரபு. அதில் மாற்றங்கள்.

**வாய்மொழி ஆணையின் வழு**

வரம்பிலா முடியாட்சியின் நடைமுறைகளுள் ஒன்றால் வாய்மொழி ஆணை அமைந்திருந்தது. விரைந்து செயல்பட இந்நடைமுறை உதவுமெனினும் பல நேரங்களில் இது தீய விளைவுகளையே உண்டாக்கும் என்பதையும் கம்பன் காட்டுகிறான்.

தயரதனிடம் இரண்டு வரங்களை எப்படிக் கேட்க வேண்டும்?

‘இரு வரத்தினில் ஒன்றினால்

அரசு கொண்டு இராமன்

பெருவனத்திடை ஏழ்இரு

பருவங்கள் பெயர்ந்து

திரிதரச் செய்தி ஒன்றினால் (1488) என்று கூறுகிறாள் கூனி.

ஆனால் கைகேயியோ தயரதனிடம்,

‘ஏய வரங்கள் இரண்டின் ஒன்றினால் என்

சேய் அரசாள்வது; சீதை கேள்வன் ஒன்றால்

போய் வனம் ஆள்வது’ (1504) என்றுதான் கேட்கிறாள். 14 ஆண்டுகள் என்று இங்கு குறிப்பிடவில்லை.

இராமனிடம் தெரிவிக்கும்போது,

‘ஆழிசூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள நீ போய்

தாழிரும் சடைகள் தாங்கித் தாங்கரும் தவம் மேற்கொண்டு

பூழி வெங்கானம் நண்ணி புன்னியத் துறைகள் ஆடி

ஏழிரண்டு ஆண்டின் வா என்று இயம்பினன் அரசன் என்றாள்’ (1601)

இதில் பதினான்கு ஆண்டுகள் என்பது மட்டும் அல்லாமல், தான் விரும்பியதை எல்லாம் தயங்காமல் சேர்த்துக் கொள்கிறாள். இதைப் பற்றித் தெரியவந்தபோதும், வரத்தில் இல்லாதவற்றை அதிகமாகச் சேர்த்துக் கொண்ட அடாத செயல் பற்றித் தயரதனே கைகேயியைக் கண்டிக்கவில்லை.

இங்கு மற்றுமொரு அரசாங்கச் செயல்படுமுறைத் தவறும் நிகழ்கிறது. தயரதன் கைகேயியின் வரங்களுக்கு இணங்கினானே அன்றி, அவ்வரங்கள் அரசாணையாக வடிவம் பெறவில்லை. ஆனால், கைகேயி, ‘என்று இயம்பினன் அரசன்’ என்று தானே, அதை அரசாணையாய் மாற்றி இராமனிடம் கூறுகிறாள். இது மட்டும் அல்லாமல்

'நாயகன் உரையான் வாயால், நான் இது பகர்வென்' என்று அரசன் இடவேண்டிய ஆணையை அவளே இடுகிறாள்.

வாய்மொழி ஆணை என்ற ஆபத்தான நடைமுறையைத் தன்னல நோக்கம் கொண்ட அதிகார வர்க்கம் எப்படித் தனக்குச் சாதகமாக மாற்றிக்கொள்ள முடியும் என்பதையும் அதனால் எந்த அளவுக்குத் தீங்கு விளைவிக்க முடியும் என்பதையும் கைகேயியின் செயல் புலப்படுத்துகிறது.

தயரதனின் பலகீனங்கள், ஆற்றலற்ற அமைச்சரவை, உரிமையற்ற மக்கள் ஆகிய நிலைகளைக் கவிக்கோ சுட்டிக்காட்டுகிறார்.

**வானரச் சமுதாயம்**

வாலியின் அரசு நடத்திய விதம், சுக்ரீவனின் அரசுப் பொறுப்பேற்ற பிறகு அவன் செய்த பிழைகள் ஆகியவற்றை விரிவாக விளக்குகிறார் கவிக்கோ. அதைப்போலவே இலங்கை அரசு நடைபெற்ற விதம், இராவணன் குறைகள் ஆகியவற்றையும் எடுத்துக்காட்டுகிறார் கவிக்கோ.

"தேவரை இடுக்கண் செய்தான்

வாசவன் திருவும் கொண்டான்

பூசுரர்க்கு அலக்கண் செய்தான்" என்று கம்பன் இராவணன் செய்த தவறுகளை எடுத்துக்காட்டுகிறான். கவிக்கோ, அவற்றையெல்லாம் பட்டியலிட்டுக் காட்டுகிறார். இராவணனின் அமைச்சர் அவை, அச்சபைக்கு முழுவதும் உரிமையளிக்காத இராவணனின் ஆணவம் ஆகியவற்றையும் அவர் எடுத்துக்காட்டுகிறார்.

**நல்லரசு**

வலிமைக் கோட்பாடு : அரசு அமைக்கவும் அதனைக் காக்கவும் வலிமை தேவையே. ஆனால் அந்த வலிமை அறத்தை ஆதாரமாகக் கொண்டிருக்க வேண்டும். ஒரு நல்லரசுக்கு வலிமை மட்டும் போதாது. அறிஞர்களின் ஆலோசனை, மக்களின் ஆதரவு இவையெல்லாம் வேண்டும். இவையெல்லாம் ஒன்று சேரும்போதுதான் ஒரு நல்லரசு உருவாக முடியும். 'அதிகாரம் கெடுக்கும்; முழு அதிகாரம் முழுமையாகக் கெடுக்கும்'

(Power currepts: and absolute power, currepts absolutely) என்று எடுத்துக்காட்டுகிறார் கவிக்கோ.

இராவணன் வலிமையால் அரசு கொண்டவன் என்பதைப் பல்வேறு பாடல்களைக் கொண்டு கவிக்கோ நிறுவுகிறார்.

நல்லரசு

இராமனின் பட்டாபிடேகப் பாடல் கம்பனது அரசியல் கோட்பாட்டின் பல கூறுகளைப் புலப்படுத்துவதாக அமைந்திருக்கிறது என்கிறார் கவிக்கோ.

'அரியணை அனுமன் தாங்க, அங்கதன் உடைவாள் ஏந்த,

பரதன் வெண்குடை கவிக்க, இருவரும் கவரி பற்ற,

விரைசெறி குழலி ஓங்க, வெண்ணையூர்ச் சடையன் தங்கள்

மரபுளோர் கொடுக்க வாங்கி, வசிட்டனே புனைந்தான் மௌலி' (10327)

வசிட்டன் மகுடம் சூட்டினான் என்று கூறுகிறதே தவிர, யாருக்குச் சூட்டினான் என்று கூறவில்லை. மகுடம் இராமன் என்ற ஒரு தனிப்பட்ட மனிதனுக்குச் சூட்டப்படவில்லை என்பதே இங்கே கம்பனின் குறிப்பு.

அடுத்து வரும் பாடலில் இதை வெளிப்படையாகவே கம்பன் கூறுகிறான்.

'சித்தம் ஒத்துளன் என்று ஓதும் திருநகர்த் தெய் நன்னூல்

வித்தகன் ஒருவன் சென்னி மிலைச்சியது எனினும், மேன்மை

ஒத்த மூவுலகத்தோர்க்கும் உவகையின் உறுதி உள்ளின்,

தத்தம் உச்சியின் மேல் வைத்தது ஒத்தது, அத்தாம மோலி' (10329)

மூவுலகத்தில் உள்ளவர்களும் அது தங்கள் தலையில் சூட்டப்பட்டதாகவே மகிழ்ந்தார்கள்.மகுடம் என்பது அரசச் சின்னங்களில் ஒன்று; இறையாண்மையின் குறியீடு என்கிறார் கவிக்கோ.

கம்பன் தன் காலத்தின் முடியாட்சி முறையில் வன்மை, மென்மைகளைத் தெளிவுற அறிந்த அரசியல் அறிஞன். அவன் அரசியலை ஆழமாகப் பேசுவதற்கு அவன் எடுத்துக்கொண்ட இராமகாதை வாய்ப்பளிக்கிறது. அதனைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு, அரசியல் கருத்துகளைத் தெளிவுறப் பேசுகிறான் என்கிறார் கவிக்கோ.

**முடிவுரை**

கவிக்கோ அப்துல்ரகுமான் முதன்மையாக ஒரு கவிதைப் படைப்பாளி. அவர் தொழில்முறையில் பேராசிரியராகப் பணியாற்றியமையால், ஆய்வுப் புலத்திலும் சிறு பங்களிப்பைச் செய்தார். அவருடைய சிறு பங்களிப்பும்கூட அவருடைய கூரிய நோக்கை, ஆய்வுப் பார்வையை வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கிறது என்பதே இக்கட்டுரை ஆய்ந்து வெளிப்படுத்தும் கருத்தாகும்.

**கருவி நூல்கள்**


1. அப்துல் ரகுமான், 'புதுக்கவிதையில் குறியீடு'; அன்னம் பதிப்பகம்.
2. அப்துல் ரகுமான், 'கம்பனின் அரசியல் கோட்பாடு'; அன்னம் பதிப்பகம்.
3. அப்துல் ரகுமான், 'கவிக்கோ களஞ்சியம்'; பரிதி பதிப்பகம், சோலையார் பேட்டை; நவம்பர், 2025.